# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

## SESSIONS CASE NO. 227 / 2024

| Deposition of Witness for | Prosecution PW5<br>Defence<br>Court |
|---|---|

| | | |
|---|---|---|
| Name | : | Tmt. Radhika |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 8th day of June, 2026.

( A1 to A3 are present )

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :</u>

**<u>முதல் விசாரணை :</u>**

நேரம் 12.33 மணி

நான் தற்போது Regional Deputy Commissioner அலுவலகத்தில் உதவி வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். 2024 ஆம் வருடம் வேளச்சேரி வட்டாட்சியராக பணிபுரிந்து வந்தபோது SRMC உதவி ஆணையாளரிடமிருந்து கோபிநாத், திருவான்மியூர் என்பவரது சாதி குறித்து உண்மைதன்மை கோரி

கடிதம் அனுப்பியிருந்தார்கள். வருவாய் ஆய்வாளர் திருமதி. பிரியங்கா களவிசாரணை மேற்கொண்டதில் திரு. கோபிநாத் த/பெ. கேலன் என்பவர் ஈழவா, BC/OBC சமூகத்தை சேர்ந்தவர் என தெரியவந்தது. அதற்கான அறிக்கையை சமர்பித்துள்ளேன். நான் சமர்பித்த சாதி குறித்த விசாரணை அறிக்கை மற்றும் கள விசாரணை அறிக்கை **அ.த.சா.ஆ.2** வரிசை ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**</u>

வருவாய் ஆய்வாளர் சமர்பித்த கள விசாரணை அறிக்கையில் களவிசாரணையில் யாரை விசாரித்தார்கள் என்பது குறித்த குறிப்பு இல்லை என்றால் சரிதான். அறிக்கையில் யாரை விசாரித்தார்கள் என்று விசாரித்தவர்களின் பெயர்கள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரியின் ஜாதி குறித்து கேரளா அரசாங்கத்திற்கு கடிதம் அனுப்பி அறிக்கை பெற்றோமா என்றால் இல்லை. எதிரியின் ஜாதி உண்மை தன்மை குறித்து எதிரிக்கு யார் ஜாதி சான்றிதழ் வழங்கியுள்ளார் என்ற விவரம் உள்ளதா என்றால் எதிரி கேரளாவில் சாதி சான்றிதழ் பெற்றுள்ளதால் எதிரிக்கு யார் சாதி சான்றிதழ் வழங்கியுள்ளார்கள் என்ற விவரம் குறிப்பிடமுடியவில்லை. நான் அனுமானத்தின் பேரில் சாதி சான்றிதழ் குறித்த உண்மை தன்மை வழங்கப்பட்டுள்ளது என்றாலும் நான் கொடுத்த சாதி குறித்த உண்மை தன்மை சான்றிதழ் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை இல்லை.**</u>

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.